# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்காக இந்தியாவின் மேம்பட்ட நிதி உதவி திட்டம்

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த சமூகத்தை சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்திய நன்கொடை உதவி திட்டத்தின் கீழான மேம்படுத்தப்பட்ட நிதி உதவி திட்டம் ஒன்றினை இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் 2025 ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

2. முன்னர் இதுபோன்ற நிதியுதவி திட்டமானது, இப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பொருளாதாரப் பின்னணி மற்றும் கல்விப் புலமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு தலா 5000 இலங்கை ரூபா வீதம் மாதாந்த புலமைப் பரிசில் என்ற அடிப்படையில் இந்திய நன்கொடையின் கீழ் முன்னைய கல்வி ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது

3. இந்நிலையில் இத்திட்டத்தின் பின்னூட்டம் நேர்மறையான பிரதி பலன்களை வழங்கி இருந்த நிலையில் பல்கலைக்கழக அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரால் இத்திட்டத்தினை மேம்படுத்தி நீடிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கான மேம்பட்ட நிதி உதவி திட்டம் ஒன்று இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் அறிவிக்கப்பட்டது.

4. மேம்பட்ட இந்த நிதி உதவி திட்டம் தற்போதைய கல்வியாண்டில் ஆரம்பித்து ஒவ்வொரு வருடமும் இலங்கை ரூபா 7500 வீதம் முதல் ஆண்டில் கல்வி பயிலும் பட்டப் படிப்பு மாணவர்கள் 100 பேருக்கு ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டு குறித்த கற்கைநெறி காலம் நிறைவடையும் வரை நீடிக்கப்படும். இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டதன் நான்காவது வருடத்தில் இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 400 மாணவர்கள் இப்புலமைப் பரிசிலினை பெற்றுக் கொள்வார்கள்.

5. இந்நிலையில் குறித்த மேம்பட்ட நிதி உதவி திட்டத்தினை வழங்கும் நிகழ்வு ஒக்டோபர் 30 ஆம் திகதி நடைபெற்றபோது உரை நிகழ்த்தியிருந்த கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் கிழக்கு

மாகாணத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்தியாவால் வழங்கப்படும் பெருமளவான அபிவிருத்தி உதவி திட்டங்களின் பகுதியாகவே இந்த நிதியுதவித் திட்டம் காணப்படுவதாக சுட்டிக் காட்டியிருந்தார். இதேவேளை கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பி பிரதீபன் மற்றும் மாணவர் பிரதிநிதிகள் தமது உரைகளில் குறித்த நிதி உதவிக்காக இந்திய அரசாங்கத்துக்கு மிகுந்த நன்றியினை தெரிவித்ததுடன் இம்மாணவர்களின் நிதி ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதற்கு இத்திட்டம் கணிசமான பங்களிப்பினை வழங்குவதாகவும் வகுப்புகளில் கவனம் செலுத்தி தமது கல்விச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆதரவாக இருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

*****

கொழும்பு
30 ஒக்டோபர் 2025